*990 மார்ச் 23] [பேரவைத் தலைவர்]

2–4–1990 (திங்கட்கிழமை) மற்றும் 3–4–1990 (செவ்வாய்க்கிழமை) .. 17—கல்வி.

4–4–1990 (புதன்கிழமை) .. ஏற்கெனவே அறிவித்தபடி அன்று வினாக்கள்—விடைகள் நேரம் இல்லை.

5–4–1990 (வியாழக்கிழமை) .. 21—மீனளம். 22—கால்நடை வளர்ப்பு.

6–4–1990 (வெள்ளிக்கிழமை) .. 26—கைத்தறியும், துணித் தொழிலும். 34—நகர்ப்புற வளர்ச்சி.

4–4–1990ஆம் நாளன்று மட்டும், பேரவை காலை 20–06 மணிக்குக் கூடும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (24–3–1990) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 13-09 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

32. 1977ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் ஓய்வூதிய விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பொதுத் துறையின் 2-1-1990ஆம் நாளிட்ட 2 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1951ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊதியங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951[14 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

33. தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின் 1988-89 ஆம் ஆண்டிற்கான இருபத்தி நான்காவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்),